தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. ‖ துந்துபி ஹு தை மீ 8 உ (21-1-'23.) ‖ ப. 37.

விஷய அடக்கம்.

1. உலக நடை ... 393
2. விறன் மீண்ட நாயனர் ... 395
3. பிரிடிஷ் ராஜாங்க கண்காக்ஷி ... 395
4. சோதிடப்புலி சோணசலம் ... 396
5. ஓர் கனவு ... 397
6. அரசாங்கம் ... 398

தமிழ் உலகு
(THE TAMIL WORLD)
ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவரும்
தமிழ் வாரப் பத்திரிகை
பத்திராதிபர், S. பட்டாபிராமன், M. A.

சந்தா விவரம் :—

உள் நாடு.	வெளி நாடு.
½-வருஷம் ரூ. 3 0 0	½-வருஷம் ரூ. 3 8 0
1-வருஷம் ரூ. 5 0 0	1-வருஷம் ரூ. 6 0 0

'தமிழ் உலகு' கார்யாலயம்
16, பசுபதி அக்கிரஹாரம்,
மைலாப்பூர், சென்னை.

உலக நடை

இந்தியாவில் நிகழும் ஸம்பவங்களையும் இந்தியர்களின் மனதையும் அறிந்து குறிப்பெழுதத் திரியும் மான்செஸ்டர் கார்டியன் பத்திரிகையின் நிருபர் துருக்கி சமாதான விஷயமாய் இந்திய முஸ்லீம்களுடைய மனோநிலையைப்பற்றியும் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையைப் பற்றியும் சில குறிப்புகள் எழுதியுள்ளார். ஆங்கிலேயர்கள் கிருஸ்துவ மதத்தை முன்னிட்டு துருக்கியருடன் விரோதங் கொண்டதாக இந்திய முஸ்லீம்கள் பலர்சந்தேகம் அடைந்திருக்கிறார்கள் எனவும், முஸ்லீம்கள் துருக்கியரின் ஜயத்தைக் கொண்டாடியபோது ஆங்கிலேய உத்தியோகஸ்தர்க ளெல்லோரும் விலகியிருந்தது இச்சந்தேகத்தை அதிகப்படுத்தி யிருப்பதாயும் குறித்திருக்கிறார். துருக்கியரின் ஜயத்தை ஹிந்துக்களும் கொண்டாடியதை இந்நிருபர் கண்டிலர் போலும். இந்தியர் யாவருக்குமே துருக்கியரிடம் அநுதாபம் உண்டாயதன் காரணம் வேறு. ஐரோப்பியர்கள் யாவரும் ஆசியா கண்டத்தவர்களை அடக்கியாள முற்பட்டிருப்பதாக ஸந்தேகம் எங்குமே நிலவுகிறது. நடந்தேறி வரும் சில காரியங்களும் இந்த ஸந்தேகத்தை அதிகப்படுத்துகின்றன.

* * *

ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையைப்பற்றி சில சமாசாரங்கள் வெளியிட்டிருக்கிறார். முஸ்லீம்கள் பலத்தையே ஆயுதமாகக் கொண்டவர்களாம். சுயராஜ்யம் கிடைத்தால் பலத்தால் ஆளப்படும் முஸ்லீம் இராஜ்யமாகி விடுமென ஹிந்துக்கள் பயப்படுவதாக யாரோ ஒரு ஹிந்து இந்நிருபரிடம் சொன்னாராம். மற்றொரு ஸமயம் முஸ்லீம் ஒருவர், ஹிந்துக்களில் பெரும்பான்மையோர் கற்றறிந்தோர் எனவும், இந்தியாவில் எண்ணிக்கையில் ஹிந்துக்களே அதிகமாயிருப்பதாலும் சுயராஜ்யமடைந்தால் ஹிந்துக்கள் உயர்பதவி பெறுவார்கள் எனவும் கூறியதாக இந்நிருபர் எழுதுகிறார். தவிரவும் மதமே அபாயத்திலிருக்கிறது என்றுசொல்லி முஸ்லீம்களை சுயராஜ்ஜியக் கிளர்ச்சியில் சேர்த்திருப்பதாகவும் நிருபர் கூறுகிறார். யாரையுங்காணாமலும், யாரும்சொல்லாமலும் இவ்விதம் இந்நிருபர் எழுதிக்கொண்டிருக்கக் கூடும். இவரது நிருபத்தை ஏற்றுக்கொண்டு இவர் பத்திரிகையும் இவருக்கு ஊதிய மளித்துவிடும். இவர் இந்தியர்களின் சுயராஜ்ய ஊக்கத்தை இகழ்ந்து கூற ஆதாரமாய்ப் பல விஷயங்களைத் தேடி வருகிறாரே தவிர, காங்கிரஸ் மகா நாட்டிலும், கிலாபத் மகா நாட்டிலும் இந்தியரின் மனோநிலையைக் கண்டறிய சித்தமாயில்லை.

* * *

அதிகார பதவியில் வீற்றிருக்கும் இந்தியர் எல்லோரும் பேரையும், புகழையும் மட்டும் நாடியவர்களாயும் தேசநலத்தை புறக்கணித்தவர்களாயும் நினைப்பது தவறு. சிலர் இந்திய அரசாங்கசீர்திருத்தச் சட்டத்தால் சுயராஜ்யம் கிடைக்கக்கூடுமென உண்மையாக நினைப்போரும் உளர். இந்த இனத்தாரில் சட்டமெம்பராயிருந்த டாக்டர் சாப்ரு

சென்னை ஜார்ஜ் டவுன் ஸ்டிரிங்கர்ஸ் தெருவு, டையமெண்டு அச்சுக்கூடத்தில்
ஆர். வெங்கிடாசலம் செட்டியாரால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16,
'தமிழ் உலகு' கார்யாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.

ஒருவர். இவர் ராஜாங்கச் சேவகர்கள் இந்தியாவிலேயே இந்தியர்களுக்குள்ளேயே தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற அபிப்பிராயமுள்ளவர். இந்தியர்களே தலைமைபெற்ற சேனை இந்தியாவுக்குத் தேவையெனக் கூறுவர். அரசாங்க நிர்வாக விஷயம் முழுமையும் இந்தியா சட்ட ஸபைக்கே அளித்துவிட வேண்டும் என்ற நோக்கங்கொண்டவர். சீர்திருத்தச் சட்டத்தால் சட்ட ஸபைக்கு இவ்வித அதிகாரம் வந்து விட்டதாகவே நினைப்பவர். ஆயினும் இங்கிலாந்தில் இந்தியா மந்திரியிடமிருந்து பல ஸமயங்களில் தடையேற்படுவதை வருந்துகிறார். இவ்விதம் தடையடையக் கூடிய சீர்திருத்தத்தை எக்காரணத்தைக்கொண்டு கொண்டாடுகிறாரோ தெரியவில்லை.

* * *

தலைநகராகிய டில்லியின் நிர்மாண வேலைகளைப்பற்றி விசாரித்துவந்த கமிட்டி அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறது. செலவை குறைப்பதற்கும்வேலையை சீக்கிரம்முடிப்பதற்கும் வழி தேட வேண்டப்பட்டவர்கள் சீக்கிரமாக வேலை நடத்தப்படுவதற்கு மட்டும் புத்திமதி கூறுகிறார்கள். செலவு வகையில் யாதும் குறைக்கக் கூடவில்லையாம். மாகாண கவர்ன்மெண்டார் எல்லோரும் செலவுக்குப் பணமகப்படாமல் வருந்தும்போது இந்தியா கவர்ன்மெண்டார் மாளிகைகள் மயமாகக்கட்டி வரப் புகுந்திருக்கிறார்கள். இங்கிலாந்தில் தவிக்கும் வேலையாளர்களுக்கு வேலை யளிக்கப் பொது கட்டடங்களைத் துவங்குவது வழக்கம். இவ்விதமாகிலும் இங்கு நேர்ந்திருந்தால் ஒருவாறு திருப்தி யடையலாம்.

இதுவரை ஜர்மானியர் நஷ்ட ஈட்டைச்செலுத்தக் கூடவில்லையெனச் சொல்லி வந்தார்கள். இனி தாங்கள்செலுத்தக்கடமைப்பட்டவர்களல்லவென்பதைத் தெரிவித்து விட்டார்கள். சமாதான உடன்படிக்கையை மீறி பிரஞ்சுக்காரர் தங்கள் தேசத்தெல்லைக் குட்பட்ட சில பிரதேசத்தைக் கைப்பற்றியதே இதற்குக் காரணமெனக் கூறுகிறார்கள். ஆயினும் நிலக்கரி விளையும் பிரதேச முழுமையும் ப்ரஞ்சுக்காரர் வசம் ஆகிவிட்டது. ஜர்மன் தேசத்தில் இருக்கும் தொழிற்சாலைகளுக்கு இந்த பிரதேசத்திலுள்ள நிலக்கரியே உபயோகப்பட்டு வந்தது. நிலக்கரியை மறுப்பதால் ஜர்மானிய தொழிற் பிரபுக்களை யடக்கிவிட ஸமயம் வாய்த்ததாக ப்ரஞ்சுக்காரர் நினைக்கின்றனர். ஆனல் ப்ரஞ்சு சேனைகள் ஜர்மனியுட் புகுந்தபோதே ஜர்மானியரிடமிருந்த கட்சிப் பிரிவினைகளெல்லாம் பறந்து விட்டது. சுதந்தரத்திற்கு அபாயம் உண்டாயதை ஜர்மானியர் யாவரும் உணருகிறார்கள். ப்ரஞ்சுக்காரர்களுடைய உத்தரவை லட்சியம் செய்பவர் காணவில்லை. பிரிட்டிஷாரோ விலகிக்கொண்டு நடப்பதை மௌனமாக கவனித்து வருகிறார்கள்.

இனும் ! இனும் !!

ஒவ்வொரு பக்கமும்
சரீர சுகத்தைப்பற்றி
போதிக்கிற தென்பதை
நமது
காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தைப் படிப்பதால் அறியலாம், தேகத்தைப் பாதுகாப்பதற்கு அனுபவத்துக்கு ஒத்துள்ள நீதி வாக்கியங்கள் நிறைந்து கிடைக்கின்றன.

உங்கள் விலாசத்தை தெரிவித்தால் தபாற் செலவின்றி இனமாய் அனுப்புகிறோம்.

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜி,
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
தபால் பெட்டி நெ. 1252,
26, பிராட்வே, மதராஸ்.

சுதேசியமானது! உபயோகமுள்ளது!!

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒற்றைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

விறன்மிண்ட நாயனார்

[துகளன் எழுதியது]

பேசும் பெருமையவ் வாரூரனையும் பிரானவனு
மீசன் றனையும் புறகுதட் டென்றவ னீசனுக்கே
நேச னெனக்கும் பிரான்மனைக் கேபுக நீடுதென்றல்
வீசும் பொழிற்றிருச் செங்குன்ற மேய விறன்மின்
[டனே.

—திருத்தொண்டர் திருவந்தாதி.

திருச் செங்குன்றத்தில் ஆவிர்ப்பவித்த இந்நாயனார் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அமரும் திருவாரூரிலே யுள்ள திருவார் பெருமை திகழ்கின்ற தேவாசிரிய மண்டபத்தில் வீற்றிருக்கும்போது அவ்வழியே யேகும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் முதலான அடியார்களை வணங்காது சென்றதைக் கண்டு வியந்து அடியாரை வணங்காத இவரை எவ்விதம் பெரியார் என்னலாம். இவரையாட்கொண்ட ஈசனரையும் போற்றுதல் எப்படி என்று விசனித்திருந்தார்; சற்றுக் கெல்லாம் அவர் திருக்கோயிலுக்குச் சென்றபோது அங்கிருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள், ஈசனரால் "தில்லைவாழ் அந்தணர் தமடியார்க்கு மடியேன்" என்று முதலடி எடுத்துக் கொடுக்கப்பெற்றவராய் திருத்தொண்டத் தொகைப் பதிகத்தால் சகல அடியாருக்கும் அடியேன் என்று பாடியதைக் கேட்டு தமக்கிருந்த சந்தேகம் நீங்கியவராய் மனமுவந்து ஆனந்த பரிதராயினர். பிறகும் முன்போல் ஈசனருக்கும் சுவாமிகளுக்கும் மற்ற நல்லடியாருக்கும் தொண்டு செய்வாராய் பல்லாண்டுகள் வாழ்ந்திருந்த பின் சிவலோகம் சென்றார் என்பது விறன்மிண்டனரின் சரிதை. இவரது சந்தேக நிவர்த்திக்காக பாடப்பட்ட தாகையால் இவர் திருத்தொண்டத் தொகைப் பதிகத்திற்கு ஒருவித காரணர் என்பதும், அதைப்பாடக்கேட்டு ஆனந்தமடைந்தார் என்பதும் இவரது பெருமை.

அகில பிரிடிஷ் ராஜாங்க கண்காக்ஷி

[S. சூர்ய நாராயணையர்]

ஆங்கிலேய அரசாங்க ஆதிக்கத்தின் கீழ்
உள்ள அநேக தேசங்களிலிருந்து ஆங்காங்கு
உற்பத்தியாகக் கூடிய விளைபொருள்க ளென்ன,
ஆங்காங்கு நடைபெற்று வரும் சிறுபான்மை
யான கைத்தொழிலின் ஸாமான்களென்ன, பொரு
ளாதார மூலங்களென்ன, இவைகளை ஒருங்கு
சேர்த்து ஆங்கில ராஜாங்கத்தின் தலைநகராகிய
நகருக்குக் கொண்டுபோய், 1923-ஆு ஒரு
பெரிய கண்காக்ஷி மண்டபத்தில் வைக்க பிரிடிஷ்
ராஜாங்கத்தார் ஏற்பாடு செய்துகொண்டு வருவ
தை நமது நேயர்கள் பத்திரிகைகளின் மூலமாய்
அறிந்திருக்கலாம்.

நமது இந்தியா தேசத்திலும் உற்பத்தியாகக்
கூடிய பலவித பொருள்களை மேற்குறித்த கண்
காக்ஷி மண்டபத்தில் கொண்டுபோய் அறிகுறியாய்
வைக்கும்பொருட்டு, அவைகளை ஆராய்ந்து சேக
ரிக்கும் நிமித்தம், நமது கவர்ன்மெண்டாரால்
கமிஷனர் என்ற ஓர் அதிகாரி நியமிக்கப்பட்டு
மேற்படி அதிகாரியும், நமது நாடெங்கும் சுற்றி
ஒவ்வொரு ராஜதானியிலும் ஆங்காங்குள்ள வியா
பாரிகளைக் கொண்டும், விவசாயிகளைக் கொண்
டும், தொழிலாளிகளைக் கொண்டும், கண்காக்ஷிக்
காக வேண்டிய ஸாமான்களை சேகரிப்பதோடு
கண்காக்ஷியின் செலவை உத்தேசித்து அந்தந்த ராஜதானியின் வீதாசாரப்படி பணத்தை வசூலித்து வருவதும் நமக்குத் தெரிந்த விஷயம்.

இவ்விதம் நமது பிரிடிஷ் ராஜாங்கத்தார் ஏற்படுத்தப் போகும் கண் காக்ஷியின் உட்கருத்தென்ன, காரணமென்ன, அது எவ்விதம் நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு பாதகமாய் இருக்கும் என்பதை ஆராய்ந்து அறிதல் இந்திய மக்களாகிய நமக்கு முதற் கடமையாகும்.

இந்த கண் காக்ஷியை ஆங்கிலேயர்கள் ஏற்படுத்தவேண்டிய அவசியத்தை ஈண்டு எடுத்துக் கூறுதல் வேண்டும். ஐரோப்பிய மகாயுத்தம் முடிந்து ஸமாதானமான பிறகு யுத்தத்தில் ஈடுபட்டிருந்த தேசங்களிலெல்லாம், யுத்தத்திற்கு முன் இருந்த நிலைமையை விட புதிய மாறுதல்கள் ஏற்பட்டன. யுத்த காரணமாக கோடிக்கணக்கான செல்வத்தை செலவு செய்த தேசங்களில், ஐசுவர்யம் குறைந்து, அன்னிய தேசத்து வியாபாரம் க்ஷீணித்தபடியால், பல முதலாளிகள் நஷ்டமடைந்து கைத்தொழிற் சாலைகளை மூடிவிட்டனர். இப்படி மூடப்பட்ட தொழிற்சாலைகளில் வேலை செய்து வந்த கூலிவேலைக்காரர்களுக்கும் யுத்தம் முடிந்து போர் முனையினின்றும் திரும்பி வந்த வீரர்களுக்கும் வேலையில்லாமல் போக, அவர்களுடைய ஜீவனத்துக்கே கேடு விளைந்தபடியால், வேலையில்லாத அவர்கள், தங்கள் ராஜாங்கத்தாரிடம் சென்று தங்களுடைய ஜீவனத்துக்காக வேண்டிய வேலையாவது, அல்லது வேலை அகப்படும் வரையில் ராஜாங்க பொக்கிஷத்திலிருந்து பண உதவியாவது செய்யும்படிக் கூக்குரலிட்டார்கள். இவர்களுடைய கோரிக்கையை மறுதளித்தால் ராஜாங்க புரட்சியே ஏற்படும் போலிருந்தது. வேலை யில்லாதவர்களுக்கு வேலை கொடுக்கப் பல வழிகளில் முயன்றும் பயன்படவில்லை. ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்காக வேலையில்லாதவர்கள் விருத்தியானார்கள்.

மேற் கூறியபடி இடருற்ற தேசங்களில் இங்கிலாந்தை முதன்மையாகக் கூறலாம். ஏனெனில், ஆங்கிலேயர்கள் யுத்தத்தில் வெற்றி யடைந்தோம் என்று ஜயபேரிகை முழங்கின போதிலும், யுத்தத்தில் தோல்வி யடைந்த தேசங்களைவிட அதிகமாய் துன்புற்றார்கள். யுத்தத்தின் பொழுது கோடிக்கணக்கான திரவியத்தை அயல் தேசங்களிலிருந்து கடன் வாங்கியது மல்லாமல் யுத்தம் நின்றபிறகு தங்கள் ஆதிக்கத்தைப் பெருக்கவும், தேசங்களைச் சேர்க்கவும் பேராசை கொண்ட மதிகெட்ட மந்திரிகளால் கோடிக் கணக்கான திரவியம் மெஸபொடேமியா போன்ற பல விடங்களில் வீண் விரயம் செய்யப்பட்டது. யுத்தத்தினால் சிதருண்ட தங்கள் வியாபாரத்தை செப்பனிடாமலும், தேசத்தின் செல்வ நிலைமையைச் சீர்தூக்காமலும், தனத்தை வேறு வழிகளில் செலவு செய்ததால், தேசத்தின் செல்வ நிலைமை சீர்குலைந்து கேவலமான ஸ்திதியை யடைந்தது. இதை மீட்கும் பொருட்டு ஜனங்களிடம் ஏராளமான வரி விதிக்க, இதைத் தாங்கமுடியாமல் ஜனங்கள் கூக்குரலிட, எரிகின்ற நெருப்பில் எண்ணெய்வார்த்தாற் போல வேலையில்லாத தொழிலாளர்கள் ஒருபுறம் ஹிம்சிக்க, ஸமுத்திரத்தில் புயற்காற்றினால் அலைக்கப்பட்டு, மலை போன்ற அலைகளால் மோதப்படும் மரக்கலமே போல், ஆங்கில ராஜாங்கமானது தத்தளிக்க நேர்ந்தது.

இந்த நெருக்கடியான ஸமயத்தில் ஆங்கிலேய கவர்ன்மெண்டார், தங்கள் தேசத்தில் புதிய கைத்தொழிலை புகவிட்டு, தொழிற்சாலைகளுக்கு மீண்டும் வேலை கொடுத்து அதன் பலனாக வேலை யில்லாதவர்களுக்கு வேலை கொடுப்பதோடு, புதிய வழியில் வியாபாரத்தை விருத்திசெய்ய எண்ணங்கொண்டு ஓர் எளிதான வழியைக் கண்டுபிடித்தார்கள். அதாவது தங்கள் ஆட்சிக் குட்பட்ட தேசங்களில் வியாபார விருத்திக்கு வேண்டிய செயல்களை ஊன்றிப்பார்த்து அன்னவர்களுடைய வியாபாரத்தையும் கைத்தொழிலையும் கைப்பற்றுவதால் தங்கள் வியாபாரத்தையும், கைத்தொழிலையும் புனருத்தாரணம் செய்யக்கூடும் என்று உத்தேசித்து மறைபொருளாக இந்த கண் காக்ஷியை ஏற்படுத்திருர்கள்.

இவ்விதம் ஆங்கிலேயர்கள் ஏற்படுத்தப் போகும் கண் காக்ஷிக்கு நம் தேசத்திலிருந்து அறிகுறியாக அனுப்பப்படும் ஸாமான்களை சேகரித்து வைத்து, தங்களுடைய நாட்டிலிருக்கும் பெருத்த முதலாளிகளையும், கைத்தொழிற் சாலை சொந்தக்காரர்களையும், ரஸாயன சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றவர்களையும் அழைத்து, அவர்களுக்கு நம்முடைய தேசத்தின் சொந்த கைத்தொழிலின் பலனாக உண்டான ஸாமான்களையும், நமக்கு அத்யாவசியமாய் வேண்டியதும் நம்மால் தினஸரி கையாண்டுவரக் கூடிய ஸாமான்களைக் காட்டி, அத்தகைய ஸாமான்களை தங்கள் தேசத்திலேயே உண்டாக்கச் செய்து, மேலும் இந்தியர்களாகிய நம்முடைய ஏழ்மைத்தனத்தினால் ஸரியானபடி உபயோகப்படுத்தப் படாததும், அப்படி உபயோகப் படுத்தினால் வியாபார விருத்திக்கும், நம் தேசத்தின் செல்வ மிகுதிக்கும் காரணமாயுள்ள மூலப் பொருள்களை தங்கள் தேசத்து முதலாளிகள் முதலியவர்கள் கைப்பற்றும்படி செய்து அவர்களுக்கு நம் நாட்டில் பல சௌகரியங்களைச் செய்து கொடுத்து, நூதன வழிகளில் அவர்களுடைய வியாபாரத்தையும், கைத்தொழிலையும் விருத்தி செய்து கொள்வார்கள் என்பது நிச்சயம்.

மேற் கூறியபடி ஆங்கிலேயர்களை நம் நாட்டின் சொந்தக் கைத்தொழிலையும், வியாபார வழிகளையும், பொருளாதார மூலங்களையும் கைப்பற்ற விடுவதால், சிறுபான்மையாக நடந்து வரும் நம் நாட்டின் கைத்தொழிலும், வியாபாரமும், தந்திரசாலிகளான ஆங்கிலேயர்களுடைய போட்டிக்கு ஈடு கொடுக்காமல், நிலைகுலைந்து நசித்துப்போவது மல்லாமல், மிகவும் ஏழைகளாகிய நாம் முன்னிலும் பதின்மடங்கு வறுமையாலும், பஞ்சத்தினாலும் பீடிக்கப்படுவதோடு, இன்னும் அநேக ஆண்டுகள் அன்னியர்களுக்குக் கீழ்ப்படிந்து அடிமைகளாய், சுதந்தர உணர்ச்சி சிறிது மின்றி, பிறப்புரிமையை இழந்தவர்களாவோம் என்பது திண்ணம்.

இந்த கண் காக்ஷியின் உட்கருத்தை அறிந்தும் அறியாதவர்கள் போல, சட்ட சபைகளில் நமக்குப் பிரதிநிதிகளாய் இருக்கும் மிதவாதிகளும், பொறுப்பு வாய்ந்த உத்தியோகஸ்தர்களும், இந்த கண் காக்ஷியை நிறைவேற்ற கவர்ன்மெண்டாருடன் ஒத்துழைப்பதுடன், இந்தியாவிலிருந்து லண்டனுக்குச் செல்லும் ஸாமான்களை கொலு வைக்க வேண்டிய கட்டடத்திற்கு பதினாறு லக்ஷம் ரூபாயும் உதவவேண்டும் என்று தீர்மானித்திருப்பது மிகவும் வெட்கத்துக் கிடமான காரியம்.

இவ்விதம் நம் நாட்டின் ஏழை வரி செலுத்துவோரின் பணத்தை, இந்திய மக்களுக்கும், இந்தியாவின் முன்னேற்றத்திற்கும் பிரயோஜன மில்லாத காரியங்களில் செலவு செய்ய கவர்ன்மெண்டாருடன் ஒற்றுமைப்பட்டு, கேவலம் ராஜாங்கத்தாருடைய நன்மதிப்பையும், சலுகையையும் அவலம்பித்து சுயமதிப்பையும், சுய புத்தியையும் இழக்கும் இவர்களா உண்மையான தேசபக்தர்களாவார்கள்?

இந்த கண்காக்ஷியில் ஸம்பந்தப் படுவதினால் உண்டாகக் கூடிய கஷ்ட நஷ்டத்தை ஊகித்திறிந்த ஆங்கிலேய ராஜாங்கத்தின் மற்றகுடியேற்ற நாடுகளில் உள்ளவர்களாகிய, தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, கானடா தேசத்தவர்கள், கண்காக்ஷியை நிராகரித்து அதில் தாங்கள் யாதொரு பாத்தியதையும் எடுத்துக்கொள்ள முடியாதென்று தீர்மானித்திருப்பதையும் பத்திரிகைகளில் காண்கிறோம்.

மேற்கூறிய தேசத்தவர்கள் ஆங்கிலேயர்களுடைய புத்திர பௌத்திரர்களாய் இருந்தும் அவர்களே கண்காக்ஷியை நிராகரிக்கும்போது நாம் ஏன் அதில் அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டும், என்பதை இப்பொழுதாவது நமது பொறுப்பு வாய்ந்த பிரதிநிதிகள் உணர்வார்கள் என்று நம்புகிறோம்.

ஆகையால் நம் தேசம் முற்போக்கடைதல் வேண்டும், சுயேச்சையுடன் வாழவேண்டும் என்ற நோக்கமுள்ள தேசாபிமானிகள் எல்லோரும் ஏகோபித்து நம்முடைய தேசமானது கண்காக்ஷியில் ஸம்பந்தப்பட முடியாது என்று ராஜாங்கத்தாருக்குத் தெரிவிப்பதோடு, கண்காக்ஷி நடைபெருமல் தடுக்கவேண்டிய பிரசார வேலையைக் கைக்கொள்ள வேண்டும்.

சோதிடப்புலி சோணசலம்.

[ராமசந்திரர்]

ஸ்ரீமான் பாலாஜிநாத் அவர்களுக்கு:—

ஐயா,

தாங்கள் 'தமிழ்உலகி'ல் எழுதிய கடிதத்தைப் படித்துக் கொஞ்சம் மனக்கவலை யடைந்தேன். நான் இதுகாறும் பொய்யை வெறுத்தவனென்பதை நன்ருய் வெளியிட வெண்ணியே சோணசலம் சொல்வதைக்கூட நம்பாமலிருந்தேன். அப்படிக் கிருக்க, தாங்கள் நான் அவனைப் பற்றிக் கதை எழுதியதாகக் கூறுவது சரியன்று. நான் இவ்விஷயத்தை அவனிடத்தில் கூறிய பொழுது அவன் அடங்காத் துயரமடைந்தான். ஏனெனில் தான் சொல்லும் சாஸ்திரத்தையன்றி தன்னையே இல்லையென்று சொல்லியது அவன் மனதை வருத்தியது. இது நிற்க, தாங்கள் "சனி நாடி" எழுதிய காலத்தில் பத்திரிகைகள் இல்லையே யெனச் சந்தேகித்தது அச் சனிநாடியின் மஹிமையை முற்று முணராத குற்றமே யெனத்தோன்றுகிறது. சோணசலம் நாடிக் கிரந்தங்களைக் குறித்துச் செய்த உபந்நியாசத்தில் இச்சனி நாடி மற்றைய கிரந்தங்களைப்போல எழுதப்பட்டதல்ல வென்றும் காலகாலனும் சர்வஞ்ஞனுமான ஆதியங் கடவுளால் அகத்தியருக்கு உபதேசிக்கப்பட்ட தென்று கூறியிருப்பதை கவனிக்கவில்லை யெனத் தோன்றுகிறது. ஆயினும் இவ்வா

றுக தாங்கள் என்னைப் பற்றியும் சோணுசலத்தைப் பற்றியும் சந்தேகங் கொண்டது காலத்தின் கொடுமையே. இக் காலத்தில் மெய் இன்னதென்றும் பொய் இன்னதென்றும் உணரும் சக்தி குறைந்து பலர் எல்லாவற்றையும் மெய்யென நம்புவதும் சிலர் எல்லாவற்றையும் பொய்யெனக் கூறுவதுமாக ஆகிவிட்டது. தாங்கள் பின்னற் கூறிய வினத்திற் சேர்ந்தவர் போலும். அவ்வாறு இருப்பினும் தாங்கள் சோணுசலத்தினிடத்தில் சில விஷயங்களைக் குறித்துக் கேட்குகும்படி சொல்லி யிருப்பதால் இன்னும் உண்மையறிந்துகொள்ள ஆவல் கொண்டவரெனவே நினைக்கிறேன். அதுபற்றியே தாங்கள் என்னைப் பொய்க்கதை யெழுதுபவனெனக் கூறியதைக் கூடக் கவனியாது சோணுசலத்தைக் கண்டு இவ்விஷயங்களைப் பற்றிக் கேட்டேன். கேட்டவுடன் அடங்கா நகைகொண்டு என்னை நோக்கி அவன் கூறியதாவது:—

" அப்பா, உன்னிடத்திலுள்ள சிநேகத்தால் நான் சொல்லிய இரகசியங்களை வெளிப்படுத்தியதனுல் அல்லவா இவ்வாறு சொல்லும்படி நேர்ந்தது. உனக்கு கடிதமெழுதிய பாலாஜிநாத் என்பவர் தன் பெயருக்கிணங்க பாலபத்தன்மையை விளக்குகிறுர். அவர் உலக சரித்திரங்களைப் படித்திருந்தும் முன்னொரு காலத்தில் நடந்தவை பின்னொரு காலத்தில் மாறி வருமென்பதைக் கவனித்திலரே. அதன்றியும் நம் தேசத்தில் உதித்த ரிஷிகள் ஆதியங் கடவுள் வாக்கினின்றும் வெளிப்பட்ட இரகசியங்களை புராணங்களின் மூலமாய் முக்காலத்து ஸ்திதிகளையும் மாந்தர்களுணரும் வண்ணம் கூறியிருப்பதை அறிந்திலர் போலும். அவர் அனுப்பிய கேள்விகளுக்கு விடை முன்னமே அரனுமேல யுமைக்குரைக்கப்பட்டிருப்பதை நீயும் அறிந்திலையா? நான் முன்னமே அண்டபுராணத்தின் மஹிமையைப் பற்றிச் சொல்லி யிருக்க, நீ அதைக் கவனியாதிருப்பது தகாது. அதில் பவிஷ்யோத்தர காண்டத்தில் பரதகண்ட வியல்புரைத்த படலத்தில் கௌரீ சங்கர ஸம்வாதத்தில் இப்பரத நாட்டிற்கு தற்காலத்தில் நடக்கும் விஷயங்களைக் குறித்தும் இனி நடக்கப்போகிற விஷயங்களைக் குறித்தும் விரிவாய் சொல்லப் பட்டிருக்கிறது. இமவான் மகளும் தன் தந்தையாரால் காக்கப்பட்ட இப்பரத கண்டத்தில் அன்போடு வினவ, மகாதேவரும் கூறுவர்:—

" நய்யும் மூலக தனிற்றனி துன்மாமதி யாண்டில்
வய்யம் புகழ மன்னர்களும் மயங்கிச் சினமெய்தி
செய்யும் வகையறியா திடையுழல் வார தகண்டும்
அய்யமுறுமாந்தர்களு மன்பே யிழந்தொழிவார்
"அன்பே யிழந்தொழி வார் தமையடக்கும் வகைநாடி
மன்பாலுறு மமைச்சர்களு மறமே துணையாக
தம்பாலுறு தண்டந்தனை தடுக்காவணம் செலுத்த
துன்பாலுயிரழி வாரொரு குருதிப் பெருக்காண்டில்
"குருதிக் கண்ணியெனு மாண்டதிற் குலவும் மன்னர் [தாமும்
பொருதிக்கணம் வெல்வா ரென்று கண்ணிற் கனல்பி [றக்க
வெருவித் தயருழந்தே யொருவிண்டோர் தமைவே [ண்டி]
வருவித்துடன் கூடி யுழைப் பெய்தும் வகைசெய்வார்
"கூடியுழைப் பெய்தும் வகை செய்யத் துணிந்தேயும்
நாடிச் சுயவாக்ஷிதனைத் தருவே னென்று கூறி
வாடிச் சிறை புகுந்த பெருந்தவனைப் பெரியோனை
தேடிச் சிறை மீட்கும் வழி காணுதுழல் வாரே.
"ஆரேசிறை மீட்பாரென வல்லலுறும் போதில்
காரேநிக ரரசன்றன தருளால் கலிநீங்கி
பாரேபுகழ் தவத்தோனு மக்ஷயமெனு மோராண்டில்
ஊரேபுகுந் துயர்வானிந்த வுலகங் களிகூற"

இப்பாரத கண்டத்தினியல்பு இத் துன்மதி வருஷம் தொடங்கி அக்ஷய வருஷம் வரையிலிவ் வண்ண மிருக்குமென்பதை தன் பெருங் கருணையினுல் மகாதேவர் சொல்லி யிருப்பதைக் கேட்டால் உனது நண்பர் மனக்கவலை யொழி வாரென நினைக்கிறேன். ஆனுலிதனையும் நான் கற்பனை செய்ததாகக் கூறுவர் போலும். அப்படி யிருப்பின் அவர் கூறிய விஷயங்களைப் பற்றி பெய ரிருப்பிடம் முதலிய வற்றோடு விஸ்தாரணமாகக் கூறி யிருக்கலாமே, அதை கவனிக்கும்படி நீ சொல்வாய். ஈசுவரன் சுய ஆக்ஷி இந்நாட்டிற் களிக்க எண்ணிய அருந்தவன் சிறையில் புகுந்திருப்பதையும் அதினின்றும் அக்ஷய வருஷத்தில் விடுபடுவதாயும் அருளியிருப்பதைக் கவனிக்கும்படிச் சொல்லவும். இப் புராணங்களை இக்காலத்தில் படித்தவர்களெனப் பெயர்கொண்டவர்கள் ஏதோ கற்பனை யென்று தள்ளிவிடுவது வழக்கமா யிருக்கிறது. அவர்கள் உலகின் சரித்திரத்தின் இயல்பை நன்குணர்ந்தவர்களல்ல ரெனவே மதிக்க வேண்டும். உனது நண்பர் பாலாஜிநாத் அக்கூட்டத்தாரோடு சேராமலிருப்பாரென நம்புகிறேன். ஆனுல் நீயே யென்னை இவ்வளவு காலமாக அறிந்திருந்தும் கற்பனைக் காரனென்று சொல்லுகையில் யார்தான் அவ்வாறு நினையார்.

மேலெழுதிய சோணுசலத்தின் வாக்கியங்களை தாங்கள் நன்றுய் கவனிக்க வேண்டும். நானும் சரியெனவே நினைக்கிறேன். இனியாவது நான் கற்பனை செய்பவ னென்று எண்ணுது சோணுசலத்தினுடைய திறமையிலும் சாஸ்திரத்திலும் நம்பிக்கை யடைவீர்களென நம்பும் நண்பன்.

இராம சந்திரன்.

ஓர் கனவு

ஒருநாள் இராத்திரி பத்துமணிக்குப் படுத்துக் கொண்டேன். அயர்ந்த நித்திரைவரவில்லை. கொஞ்சநாழிகைக் கெல்லாம் ஒரு கனவு கண்டேன். இப்பொழுது நினைத்தாலும் உடம்பு நடுங்குகிறது. சொல்வதற்கும் நாவெழவில்லை. ஆயினும் சொல்லுகிறேன். எங்கே பார்த்தாலும் திடீரென்று ஒரு வெளிச்சம் உண்டாயிற்று. உயர்ந்த மேனியும், கோரைப்பற்களும், நெருப்புப் பொறி பறக்கும் கண்களும், செம்பட்டை மயிருடன் கூடிய இரண்டு யமபடர்கள் என்னை நோக்கி ஓடோடியும் வந்தார்கள். வந்ததும் என்னை பலாத்கார யமபாசத்தினுல் கட்டி யமனுலகத்திற்குக் கொண்டுபோனுர்கள். போனவுடன் என்னைத் தலைகீழாய் நிறுத்தி என் மார்பில் காலாலுதைத்தார்கள். ஒரு பள்ளத்தில் தள்ளி விஷத்தோடு கூடிய நெருப்புப் பந்தங்களால் நான் எழுந்து வெளியேற வொட்டாமல் என்னைக் குத்தித் தடுத்தார்கள். பழுக்கக் காய்ச்சின இருப்புலக்கையால் என்னைப் புடைத்தார்கள். செந்நாய்கள் மேல் விழுந்து என்னுடைய யாதனுசரீரத்தைப் பிடுங்கித்தின்றன. புழுக்களை பலாத்காரமாக என் வாயிலூட்டினுர்கள். என் தேக முழுவதும் அவ்வக

ரின் மலங்களால் பூசப்பட்டது. பசி தாஹமோ தாங்க முடியவில்லை. ஐயோ! நானென்ன செய்வேன்!! நானேன் இந்தக் கஷ்டங்களையெல்லாம் அனுபவிக்கிறேனென்று வாய்விட்டலறிக்கொண்டு என்னை இழுத்து வந்த யமபடர்களைக் கேட்டேன். அவர்கள் சொன்னதாவது "அடே! பிராம்ஹணப் பதரே, இப்போதிருக்குமிடம் உனக்குத் தெரியுமா. இதுதான் 'அஹம்பாவ த்வம்சம்' என்ற நரகம். அன்றைய தினம் காவேரியிலிருந்து ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பி வருகையில் ஒரு கிழவன் தழதழத்த குரலுடன் தள்ளாடி வந்துகொண்டிருந்தானல்லவா. அவன் உன் சமீபத்தில் வந்ததும் அவன் தாழ்ந்த ஜாதியில் பிறந்தவனென்று கண்டுகொண்டாய். உடனே நீ என்ன செய்தாய்? அவன் சமீபத்தில் வந்த குற்றத்திற்காக அவனை வாயில் வந்தபடியெல்லாம் திட்டினாய். காரியுமிழ்ந்தாய். அவனைக் கீழே தள்ளினாய். உடனே அவன் மூர்ச்சையடைந்தான். அப்போது உனக்கு என்னமாயிருந்தது. "ஜாதியில் உயர்ந்தோனென்ற இறுமாப்பினாலல்லவா அப்படிச் செய்தாய். தன்வினை தன்னைச்சுடும் என்பதை மறந்தாயல்லவா. உயிர்களெல்லாம் கடவுளுடைய திருமேனிகளென்பதை ஏன் உணரவில்லை. உடம்புகளெல்லாம் அவருடைய ஆலயங்களல்லவா. உன் குற்றத்திற்குத் தக்க தண்டனையை அனுபவிக்கத்தான் வேணும். இனியாவது நல்ல கர்மங்களைச் செய்துகொண்டு உயிர்களிடத்து அன்புடனும் ஆதரவுடனும் நடந்துகொள்" ளென்று சொல்லிக்கொண்டே என்னைத் தண்டித்துக் கொண்டிருந்தார்கள். கஷ்டம் பொறுக்காமல் பெருங்குரலிட்டு அழுதேன். உடனே விழித்துக்கொண்டேன். என் தாயார் பக்கத்தில் வந்து குழந்தாய்! ஏனப்பா அழுகிறாயென்றாள். லஜ்ஜையினால் தலை குனிந்தேன். ஒன்றுமில்லை யென்று என் தாயாரிடம் சொன்னேன். இதுவும் ஈசன் திருவிளையாடல் தானென்று நான் கண்ட கனவின் தத்துவத்தைச் சிந்திக்கலானேன்.

அரசாங்கம்

மானிடர் தோன்றிய காலையில் நாடுகள் முழுதும் காடுகளாகவே இருந்தனவாம். அன்றியும், மக்கள் என்று சொல்லப்பட்ட இம் மானிடர்களுக்கு நெற்றி சூம்பியும், தாடை நீண்டும், தோலெல்லாம் மயிர் செறிந்தும், இருந்தமையால், மாக்கள் என்று சொல்லப்படும் விலங்கினங்களைச் சார்ந்த குரங்குகளுக்கும் இம் மானிடர்களுக்கும் வித்தியாசம் சிறிதுமே புலப்படவில்லையாம். என்றாலும், மானிடர்கள் முதன் முதலில் மொழி மொழிக்கவும் தீ மூட்டவும் தெரிந்து கொண்டனராம். இதனால் இவர்கள் தாம் மாக்களை (விலங்கினங்களை) விட உயர்ந்தவர்கள் என்று நினைத்து, விலங்கினங்களினின்றும் வேறுபட்டு வாழ நினைத்தனர். அழுத்தமான மரங்களின் கொம்புகளைக் கொண்டும், மூங்கில்களை வில்லாகவும் முட்செடிகளை அம்பாகவும் கொண்டும், விலங்கினங்களை வெருட்டியும் கொன்றும், மானிடர்களாயுள்ளோர் மட்டும் தனித்து வாழ்ந்து வரலாயினர். கொன்ற விலங்குகளை முதலில் பச்சையாகவும், பின்னர் சுட்டுத்தின்னவும் ஆரம்பித்தனராம்.

இப்பொழுதும் ஆப்பிரிக்கா முதலிய தேசங்களில் காட்டுமனிதர்கள் வசித்து வருவதாகவும், அவர்கள் மனிதர்களைத் தின்னுவதாகவும் நாம் படித்தும் கேட்டும் வருகின்றோம். அன்றியும் இருபது வருடங்களுக்கு முன் நாம் பார்த்த மனிதர்கள், இப்பொழுது நடை, உடை, பாவனைகளில் முழுதுமே மாறுபட்டிருக்கக் காண்கிறோம். கர்நாடக கோலத்துடன் விளங்குபவர்களை நாம் காட்டுமனிதர்களென்கின்றோம். இந்த சொற்ப காலத்திற்குள்ளேயே மனிதர்களின் நடை, உடை, பாவனை முதலியவைகளில் இவ்வளவு வித்தியாசங்களேற்பட்டிருக்குமாயின், உயிர்ப்பொருள் நூல் வல்லுனர்களின் பல்லாயிர வருடங்களுக்கு முற்பட்ட மேற்கூறிய ஆராய்ச்சியானது, உண்மையாகத்தான் இருக்கவேண்டுமென்பதில் சந்தேகமுளதோ?

இனி, நம் விஷயத்தைத் தொடங்குவாம். மாக்களுடன் சேர்ந்து வசித்து வந்த மக்கள், அவைகளினின்றும் பிரிந்து, கூட்டங்கூட்டமாய் வசித்துவரலானார்கள். இக்காலத்தில், இவர்களுக்குள் அரசர்களென்றும் குடி ஜனங்களென்றும், உயர்ந்தோர் என்றும் தாழ்ந்தோன் என்றும் வித்தியாசம் கிடையாது. அவரவர்க்குக் கிடைத்தவற்றை அவரவர் உண்டு, உறங்கி, புத்திர பாக்கியங்களைப் பெற்று பெருவாழ்வு வாழ்ந்து வந்தனர். நாளடைவில் கூட்டம் பெருகிற்று. மூளைவளர்ச்சி யடைந்தது. நாகரீகம் முதிர்ந்தது. மக்கள் பலர் மாக்களை (விலங்குகளை) அடித்துத் தின்பதிலிருந்து, மரக்கறிகளைச் சமைத்துச் சாப்பிடலாயினர். மற்றும், அவ்விலங்குகளின் தோல்களையே ஆடையாக அணிந்து வந்ததை விடுத்து, பருத்தியைக் கொண்டு, நூல் நூற்று, துணிகளை நெய்து உடுத்துக்கொள்வாராயினர். மக்களின் கூட்டமும் மென்மேலும் பெருகிற்று.

கூட்டம் பெருகவே, அக் கூட்டத்தினருள் சோம்பேறிகளாக விருந்தச் சிலருக்கும் உழைப்பாளிகளாக விருந்தப் பலருக்கும் வேற்றுமை மிகுதிப்படலாயிற்று. இக்காலத்தில் நாம் ஒற்றுமையென்று ஓலமிடுகின்றோம். ஆனால் வேற்றுமையானது நாளுக்குநாள் விருத்தியடைந்து வருகின்றது. இது நம் தேசத்தில் மட்டுமல்ல; நாகரீகத்தில் முதிர்ந்ததாகக் கருதப்படும் ஐரோப்பாவில் இவ்வேற்றுமையானது வாயளவில் நில்லாமல் கையளவில் வளர்ந்து வந்துவிட்டது. இதைப் போலவே, அக்காலத்திலும் சோம்பேறிகள் உழைப்பாளிகள் வேற்றுமையானது, அவர்களுக்குள் ஒரு பிளவை யேற்படுத்திற்று. இப்பிளவினால் சோம்பேறிகளானச் சிலரையடக்க, உழைப்பாளர்களான பலர் சேர்ந்து, தங்களுள் ஒரு சிலரைப் பொறுக்கியெடுத்து, இச்சோம்பேறிகளை அடக்கி வரும்படியும், இச்சிலருடைய காலக்ஷேபத்திற்குத் தாம் உதவுவதாயும் வாக்களித்தனர். இவர்கள் நாளாவட்டத்தில் பொது ஜனங்களின் சொத்தைப் பாதுகாக்கும் காவலர்களாய் விளங்கி, கிராமப்பாது காவலர், நகரப்பாதுகாவலர், நாட்டுப் பாதுகாவலர் எனப் பெயர்பெற்றனர். இக் காவலர்களே காலக் கிரமத்தில் அரசர்கள் என பெயர்பெற்று, அவர்களுக் குள்ளடங்கிய சிறு சிறு பாகத்தை ஒவ்வொரு அரசாங்கமென அமைத்துக்கொண்டு, வாழையடி வாழையாக வாழ்ந்து வந்ததாகவும் இதர ஜனங்கள் அவர்களுக்கு வரிசெலுத்தி வந்தார்களெனவும் பண்டைகால சரித்திரவாயில்களாக நன்கு விளங்கும்.

'பணம்.'

பாரதநாட்டின் நிலைமை

பொன்விளையும் பூமியெனவும், கற்பக நாடெனவும் புகழுப்பெற்று பலவகை ஏற்றமும் இயற்கை வளமும் வாய்ந்த நம் நாடு இக்காலத்திலே சீரும் சிறப்புமற்று, பரிகாசத்துக் கிடமாய்விட்டது ஒருபுறமிருக்க, உலகனைத்திற்கும் உணவளித்த நம்மவர் புசிக்க வகையின்றியும் கூலிக்கு வேலையின்றியும் கூக்குரலிடும்படியான நிலைமை நேர்ந்திருக்கிறது. இத்தகைய இழி நிலைமைக்குக் காரணம் யாதென்பதற்குள்ள விவரங்களையும், இழிநிலையை நீக்கி, முன்போல் உயர்பதம்பெற்று ஒப்புயர்வுற்று வாழ்வதற்கான வழிகளையும், இச்சிறு நூலிலே பரக்கக்காணலாம். ராஜீய விஷயத்தில் உயர்நிலைமை யெய்துமுன், செல்வ நிலையில் உயர்நிலை எய்த முனைய வேண்டும். ஆதலின் தேசச்செல்வ நிலையை நம் சிறுவரும் சிறுமியரும் ஜன சமூகத்தினரும் நன்குணர்ந்து, தேசத்தொழிலை விருத்தி செய்து, வியாபாரத்தைப் பெருக்கி செல்வச்சிறப்புற்று சுக வாழ்வு வாழ்வதற்கான காரியங்களில் முனைய வேண்டுமென்பதே இந்நூலில் நோக்கமாகும்.

விலை ரூபா 1—0—0.

கணேஷ் கம்பெனி,
39, தம்பு செட்டி தெரு, சென்னை.

காலண்டர் வரவு

ஸ்ரீ காசி பாலாஜி அண்டு, கம்பெனி
பட்டு பீதாம்பர வர்த்தகர்களால்

நாம் இவ்வருஷத்திய காலண்டர் (தேதிக் குறிப்பு) ஒன்று வரப்பெற்றோம் அது நல்ல தாளில் 12 ஷீட்களில் ஒவ்வொரு ஷீட்டிலும் இலக்ஷ்மி, சரஸ்வதி இவ்வித இந்திய தெய்வ திருவுருவங்கள் அமையப் பெற்று மிகவும் நேர்த்தியாய் அச்சிடப்பட்டிருக்கின்றது.

துப்பறியும் நாவல்கள்

ஆரணி குப்புசாமி முதலியார் எழுதியது

	ரூ.	அ.
இந்திரா பாய் ..	2	8
அல்லது இந்திரஜாலக் கள்வன்		
சுந்தர சிங் ...	1	8
அல்லது பாஸ்கரவிலாஸ் படுகொலை		
அம்புஜாக்ஷி ...	2	0

வி. நாராயணன் கம்பெனி,
4, கொண்டிசெட்டி தெரு, மதராஸ்.

வெளியாகி விட்டது!   வெளியாகி விட்டது!!

நீண்ட காலமாய் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த கோயம்புத்தூர் வக்கீல்
V. குப்புசாமி அய்யரவர்களுடைய

ஸ்ரீமத் பகவத் கீதை

யின் தமிழ் பெயர்ப்பு ஐந்தாவது பதிப்பாக இப்போது வெளிவந்து விட்டது. இதில் மூல ஸ்லோகம் கிரந்தத்திலும், தமிழ் ஸ்லோகம், பதவுரை, பொழிப்புரை மதத்திரய பாஷியங்களின் அபிப்பிராய பேதங்கள், ஸ்வய அபிப்பிராயம் முதலியவை அடங்கியுள்ளன. முதல் 10 அத்தியாயங்கள் கொண்ட முதல் வால்யம் ராயல் 1-8 சைசில் 566 பக்கங்கள் கொண்டது. காலிகோ பைண்ட் செய்யப்பட்டது. விலை ரூபா 5—0—0.

வி. பி. தபால் செலவு 0—11—0.

இரண்டாவது வால்யம் அச்சிலிருக்கிறது.

A. சபாபதி பிள்ளை, ருக்மா மான்ஷன்,
திருவல்லிக்கேணி, சென்னை.

கல்யாண காலம் வந்து விட்டது.

எங்கள் பிராஞ்சு ஒன்று சென்னை 336-ம் நெ. தம்புச்செட்டி தெருவில் ஸ்தாபித்திருக்கிறோம்.

உங்களுக்கு வேண்டிய பட்டு புடவைகள், ரவிக்கைகள், அங்கவஸ்திரங்கள் முதலிய தினுசுகளுக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள்.

விலை விபர ஜாப்தா இனாம்.

BALAJEE & Co.,
Silk Emporium, Benares City,
Branch :—336, தம்பு செட்டித் தெரு, சென்னை.

Tel :—BALAJEE.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

தந்தி விலாசம்: "ஆதிமூர்த்தி" பனாரஸ்.

பரிசுத்தமான சுதேச பட்டினால், சுதேச வெள்ளி, தங்க சரிகையால் நெய்யப்பட்ட சேலைகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள் சகல தினுசுகளும் தயாராக இருக்கின்றன. அவைகளின் விபரகேட்லாக்கு ஆர்டர் செய்தால் அனுப்புகிறோம். கேட்லாக் இனாம்.

SILK PITAMBER Co.,
BENARES CITY.

Telegrams: "Adimoorthi" Benares.

கதர்! கதர்!! கதர்!!! ஸ்ரீ பண்டார் சுத்த சுதேசிய உடை!!!

பெயர்பெற்ற மோரதாபாத் கதர் உடைகளின் நிலயம்.

விலை வெகு குறைவானது. இந்தியா, பர்மா, சிலோன் எங்கும் சுதேசிய பண்டக சாலைகளுக்கு நாங்களே கதர் உடைகள் மொத்தமாய் அனுப்புகிறோம். ஓர்முறை வாங்குபவர் நீடித்து எங்களிடமே வியாபாரம் செய்வார்கள்.

கதர் துணிகள்.

நெ. 1.	10 கஜம்	×25″	ரூ. 2½ முதல்	ரூ. 3	வரை
„ 2.	12 „	×27″	„ 4	„ 6	„
„ 3.	16 „	×34″	„ 6	„ 9	„
„ 4.	18 „	×36″	„ 8	„ 12	„
„ 5.	20 „	×44″	„ 11	„ 13	„

வெளுக்கப்படாத கதர் உடைகள் பீஸ் ஒன்றுக்கு கால் ரூபாய் குறைவாக கிடைக்கும். ஆர்டருடன் முன்பணமாக 4ல் 1 அனுப்பவேண்டும்.

தந்தி விலாசம்: 'Shree.'

கதர் சேலைகள் முதலியன.

10 கஜம்	× 45″	ரூ. 4½ முதல்	ரூ. 6	வரை
9½ „	× 40″	„ 3	„ 5	„
3 „	× 1½ கஜ	„ 2	„ 3	„

எங்களிடம் கிடைக்கும் வேறு பலவித சுதேசிய துணிகளின் விலை விபரங்களை எழுதிக் கேட்டறிந்துகொள்ளலாம்.

SHREE BANDAR,
Mandi Bans Street,
Moradabad, U. P.

GOOD SEEDS

As good as can be grown. Sow the right kind of seed at the right season and save disappointment. We have just the right kind of seeds for Indian climate both flower and vegetable.

Beautifully illustrated large descriptive catalogue free on application.
(Please mention this paper when writing and correspond in English only.)

Pestonjee P. Pocha & Sons
Seed Merchants, Poona.

The United India Life Assurance Co., Ltd.

Head Office: Madras

(Established 1906)

இந்தியர் நிர்வாகத்திலிருக்கும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி சென்னையில் இதொன்றே. உயிரின் நிலையில்லாமையை நினைத்து, நம் தமிழ் நாட்டாரனைவரும் இக்கம்பெனியில் சந்தாதாரராக நலம் பெறுவாராக. சென்ற வருஷத்தில் கிடைத்துள்ள லாபத்திலிருந்து ரூ. 1000 பாலிஸிக்கு ரூ. 15 வீதம் சந்தாதார்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. ஏஜெண்டுகள் தேவை.

Apply to:—K. S. Gopalayya,
MANAGER.

இனாம்! இனாம்!!

அழகான 12 ஷீட் காலண்டர். தமிழ் இங்கிலீஷ் தேதியுள்ளது. ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பி தங்கள் விலாசத்தை ரிஜிஸ்தர் செய்துகொள்ளுங்கள்; முந்துங்கள்.

சகல விதமான பட்டு தினுசுகளும்
காசி விலைக்கு கொடுக்கப்படும்.
:: ஒருமுறை பரிக்ஷியுங்கள் ::

K. S. MUTHIAH & Co.,
188, Govindappa Naick Street, Madras.
Head Office: BENARES.